

3763

# மரணமென்றால் என்ன?

# மரணம் என்றால் என்ன?

PRESENTED BY
V. PL. V. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

ஆசிரியர்:

ந. சி. கந்தையா

PRESENTED BY
V. PL.
KASIVIS
P

பகனேரி

"ஸ்ரீ பிரிண்டர்ஸ்" அச்சகத்தில்
அழுத்தப்பட்டது.
1948.

பதிப்புரிமை] [விலை 0 6 0

# முன்னுரை

'மரணம் என்றால் என்ன?' என்னும் சிறிய நூலில் மரணத்தின் பின் மக்கள் வாழ்க்கை எவ்வகையினது என மேல் நாட்டு ஆராய்ச்சி வல்லார் கண்டு கூறிய முடிவுகளை எல்லாம் தொகுத்துத் தொடர்பு படுத்திக் கூறியுள்ளோம். மேல் நாடுகளில் இறந்தவர்களின் ஆவிகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யவும் அவைகளுடன் பேசவும் கூட்டங்கள் பல உள்ளன. இவ் வரலாறுகளின் விரிவை "மரணத்தின் பின்?" என்னும் எமது நூலில் விரித்துக் கூறியுள்ளோம் அந் நூலிற் காணப்படாத கருத்துக்கள் பல இந் நூலில் உள்ளன.

சென்னை
10—12—48. } ந. சி. க.

# மரணம் என்றால் என்ன?

## தோற்றுவாய்

மக்கள் இவ்வுலகில் தோன்றிய காலம்முதல் மரணத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்துவருகின்றார்கள். மரணத்தைப்பற்றிய ஆராய்ச்சியே நாளடைவில் சமயமாக உருவெடுத்தது. மரணம் என்னும் அச்சத்தினால் சமயமும் தோன்றிற்று. இறந்தபின் தமக்கு நேரும் நன்மைதீமைகளைப் பற்றிய நம்பிக்கையினால் மக்கள் பாவம் புண்ணியம் என்னும் உணர்ச்சிகளைப் பெற்று நல்ல முறையில் நடக்க முயன்று வருகின்றனர். மரணத்துக்குப் பின் தமக்கு நேர இருப்பவைகளை அறியாது தத்தளித்துக்கொண்டிருக்கும் மக்களிடையே ஒரு சிலர் தோன்றித் தாம் மறு உலகச் செயல்களை அறிவதாகவும், இறந்தபின் மக்கள் மறு உலகில் செவ்வனே வாழ்வதற்கு தாம் கூறுகின்றவைகளைச் செய்தல்வேண்டுமெனவும் கூறிப் பொது மக்களை நம்பவைத்து அவரிடம் பொருள் பறித்து உண்டு காலங்கழிப்பாராயினர். இவர்களே நாளடைவில் குருமார் புரோகிதர் என்னும் கூட்டத்தாராகப் பெருகினர். மேல் நாடுகளில் இறந்தவர்களின் ஆவி சம்பந்தமான ஆராய்ச்சி செய்யும் கழகங்கள் பல இருக்கின்றன. அக் கழகங்களிலுள்ளவர்கள் ஆராய்ந்து கண்ட முடிவுகள் பல தமிழ் மக்கள் மிகப் பழங்காலத்தே கண்டறிந்த முடிவுகளை

ஒத்துள்ளன. இன்று 'சைவசித்தாந்தக் கொள்கைகள்' என வழங்குவன தமிழ் மக்கள், ஆரியர் இந்திய நாட்டில் அடி எடுத்து வைப்பதற்கு நெடுநாள் முன் கண்டறிந்த உண்மைகளே. தமிழர் சமயக்கொள்கை உலக மக்களுக்குப் பொதுவானது. அது உயிர், உலகம், கடவுள் என்னும் முப்பொருள்களைப்பற்றி ஆராய்வது. 'வருணாச்சிரம தருமங்களோ' சாதி வேறுபாடுகளோ அதற்கு இல்லை. திருக்குறளிற் கூறப்படும் சமயம் இவ்வகையினதே. முதற்கண் மேல்நாட்டறிஞர் மரணத்தின்பின் உயிர்களின் நிலையைப் பற்றிக் கண்டறிந்து கூறியவைகளைப்பற்றிப் படிப்போம்.

## மரணம் என்றால் என்ன?

மரணம் என்றால் என்ன? அது உயிர் உடலை விட்டுப் பிரிவது. இது இன்னொரு புதிய வாழ்க்கையின் தொடக்கம். மரணத்தினால் உயிரும் அதன் அறிவு உணர்ச்சியும் அழிந்துபோவதில்லை. பிறந்த ஒவ்வொருவனும் இறக்கிறான்; இறந்தவன் உயிர்வாழ்கிறான். மரணம் என்பது நாம் ஒரு வீட்டைவிட்டு இன்னொரு வீட்டில் வாழ்வது போன்றது. நாம் கிழிந்துபோன உடையை எறிந்துவிட்டுப் புதிய உடையை அணிகின்றோம்; அதுபோல உயிர் பழைய உடலை விட்டுவிட்டுப் புதிய உடலில் நுழைகின்றது. உயிர் மேலும் மேலும் பல அனுபவங்களைப் பெற்று வளர்ச்சியடைவதற்கு மரணம் இன்றியமையாத நிகழ்ச்சி. இறப்பையும் பிறப்பையும் தூங்குவதற்கும் விழிப்

பதற்கும் ஒப்பிடலாம். மரணத்தைப் பற்றிய தன்மைகளை அறிந்தவன் அதற்கு அஞ்சமாட்டான். தான் இருக்கும் உடல், வாழத் தகுதியற்றதாகும்போது உயிர் அதனைவிட்டுப் பிரிகின்றது. ஒரு உடலில் உயிர் புகுவது பிறப்பு எனவும் அதனைவிடுவது இறப்பு எனவும் கூறப்படுகின்றன.

## மரணத்தின்போது

உடலைவிட்டுப் பிரிந்ததும் உயிர் இன்னொரு சுறுசுறுப்புள்ள உலகை அடைகின்றதெனப் பொது மக்கள் நினைக்கிறார்கள். ஒருவன் மரண நிலையை அடையும்போது அவனுக்கு மயக்கம் உண்டாகின்றது. அப்பொழுது புலன்கள் படிப் படியே ஓய்ந்துபோகின்றன. பார்த்தல் கேட்டல் உணர்தல் முதலியன மங்குகின்றன. அவ னுடைய ஆவி, அணையும் தறுவாயிலுள்ள மெழுகு திரிபோலாகின்றது. மரணத்தின்போது உண் டாகும் நிலை பெரும்பாலும் இவ் வகையினதே. சிலருக்கு வெளிப்புலன்கள், ஓய்ந்து வருவதற்குப் பதில் அதிக கூர்மை அடைகின்றன. இறந்து போகின்றவர்கள் அடுத்த அறையில் அல்லது வேறு இடத்தில் நடக்கின்றவைகளை அறிவது இயல்பு. மரணம் நெருங்க நெருங்கத் தொலை விடங்களிலுள்ள காட்சிகளைக் காணவும் ஒலிகளைக் கேட்கவும் முடிகின்றது. மரணமானவனுடைய தோற்றத்தைத் தொலைவிடங்களிலுள்ள அவ னுடைய நண்பரும் சகோதரரும் நேரில் பார்த்த நிகழ்ச்சிகள் உண்டு. சில சமயங்களில் அவர்கள்

அத் தோற்றங்களோடு பேசியுமிருக்கிறார்கள். பெரும்பாலும் அத் தோற்றங்கள் மரணத்துக்கு முன்னாகவே காணப்பட்டன. இறக்கின்றவர் எவரைப் பார்க்க அதிக ஆவல் கொண்டிருந்தாரோ அவரெதிரே அவரது வடிவம் அவர் இறந்தவுடன் தோற்றப்பட்டுள்ளது இவ் வடிவங்கள் தோன்றிய நேரத்தையும் மரணம் உண்டான நேரத்தையும் நன்கு கவனித்துப் பார்த்தபோது இத் தோற்றங்கள் மரணத்துக்கு முன்னேயே காணப்பட்டிருக்கின்றன.

மரணமடைகின்றவரிற் பலர் தமது நேசத்துக்குடையவர்களாயிருந்து இறந்து போனவர்கள் தமக்கு அண்மையில் நிற்பதாக அறிகின்றனர். இதனால் அவர்கள் உண்மையாக அங்கு வந்து நிற்கின்றார்கள் என்று கூறுதல் முடியாது. சூக்கும உலகிலே ஒருவரை ஒருவர் தூரம் பிரிப்பதில்லை. இதனை இவ்வுடலோடுள்ளவர்கள் நினைத்துப் பார்த்து அறிவது கடினம். இவ்வுலகில் தொலைவினால் கட்டுப்பாடு உண்டு தொலைவிலுணர்தலைக் (Telepathy) கொண்டு மனம் தொலைவினால் கட்டுப்படுத்தப் படுவதில்லை என அறிகின்றோம். தொலைவிடங்களிலிருக்கும் இருவர் தமது மனங்களினால் தொடர்புவைத்திருக்கலாம். இவ்வாறே வெவ்வேறிடங்களிலிருக்கு முயிர்களும் தொடர்பு வைத்திருக்க முடியும். இதற்கு அண்மை வேண்டியதில்லை. மறு உலகிலுள்ள உயிர்களோடு இறந்து போகின்றவர்கள் தொடர்பு வைத்திருப்பதால் அவர்கள் உற்சாகம் அடைகின்றனர்.

இறந்து போகின்றவரின் நுண்ணுடல் பரு உடலைவிட்டுச் சிறிது சிறிதாக வெளியேறுகின்றது. நுண்ணிய உடல் பருஉடல் வடிவினதாகிய ஆவித்தோற்றமுடையது. வாழ்நாள் முழுமையும் இரு உடல்களும் ஒருமித்து உறைகின்றன. மரண காலத்தில் நுண்ணிய உடல் பருஉடலை விட்டுப் பிரிந்து உயிருக்குச் சிலகாலம் போர்வையாக உதவுகின்றது. அவ்வுடல் நுண்ணிய சடப்பொருளாலானது. அது விஞ்ஞானிகளின் பரிசோதனைக்கு அகப்படாதது. நுண்ணிய உடல் பரு உடலைவிட்டுப்பிரியும்போது இரண்டையும் சூக்குமமான ஒருநூல் இணைத்துப் பிடித்துக்கொண்டிருக்கிறது இறுதியில் இவ்விணைப்பு அறுந்துபோகின்றது சூக்கும உடல் பருஉடலைவிட்டு அந்தரத்தில் பறந்து செல்கின்றது. இச் சூக்கும உடல் உயிரன்று. பருஉடலும் சூக்கும உடலும் உயிரின் சிறிதுகாலப் போர்வைகள். சூக்கும உடலில் மிதந்து செல்லும் உயிர் கருப்பைக்குள் இருக்கும் குழந்தைக்கு உண்டாயிருக்கும் தூக்க நிலையைப் போன்ற ஓர் நிலையை அடைகின்றது. அது சூக்கும உடலில் வாழ்வதால் பிறப்பதற்கு ஆயத்தமாகின்றது.

## உயிரின் தூக்கநிலை

உயிர்கள் பெரும்பாலும் குழப்பமின்றி நித்திரைபோகின்றன. சில சமயங்களில் குழப்பங்கள் உண்டாகின்றன. ஒன்று கனவு காணுதல். இக்கனவுகள் உயிர்கள் பருஉடலை விட்டுப் பிரியும் போது, அவை சிலர்மீது கொண்டுள்ள அன்பு,

பகை, நிறைவேற்றப்படாத கடமைகள், தாம் விட்டுப்பிரிய நேர்ந்தவர்கள் மீது விருப்பம் போன்றவைகளால் உண்டாகின்றன. இக்காரணங்களால் உயிர்கள் மறுபடியும் பூமிக்கு வருகின்றன.

மன அமைதியோடு உடலைவிட்டுப் பிரியும் உயிர்களுக்கு நித்திரையில் இவ்வகைக் குழப்பம் உண்டாவதில்லை. பூமொட்டு பூவாக மலர்வது போல அவை நித்திரையிலிருந்து புதிய உலகில் வாழ்வதற்குத் தகுதி அடைகின்றன. இவ்வுலக பாசங்களால் கவரப்படும் உயிர்கள் மற்றவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புகின்றன. சில சமயங்களில் அவை இவ்வுலகிலுள்ளவர்களுக்கு முன்னால் தோன்றுகின்றன. இவ்வுலகிற் காணப்படும் ஆவிகள் இவ்வகையினவே. இவ்வுலகில் தங்கிக் களைத்துப்போன உயிர்கள் மறுபடியும் நித்திரை அடைகின்றன.

## உயிர்களின் தூக்கம்

நித்திரையில் இருக்கும் உயிர்களை இவ்வுலகத்தவர்களால் குழப்பமுடியும். தனது பிரிவைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவனுக்குத் தான் ஏதும் சொல்லவிரும்பினால், அல்லது இவ்வுலகிலுள்ளவர்கள் வருந்தி அழைத்தால் அது தனது தூக்க நிலையைவிட்டு இவ்வுலகுக்குத்திரும்பி வர முயல்கின்றது. இவ்வாறு அரை விழிப்பிலுள்ள உயிர்களே ஆவிகளோடு பேசும் நிலையங்களில் தோன்றுகின்றன. குழந்தையாயிருந்து இறந்தபோன உயிர் கருப்பத்திலிருப்பதுபோன்ற

கால அளவுக்குத் தூங்கும். அது பலமும் புதிய உயிர்ப்பும் அடையும் அளவுக்கு உறங்குகின்றது.

இயற்கையான மரணமடைந்த உயிர்களே விரைவில் இயற்கையான தூக்கத்தை அடைகின்றன. அபாயங்களுக்குள்ளாகிச் சடுதிமரண மடைகின்றவர்கள், கொலையுண்டவர்களின் உயிர்கள்—அதாவது சடுதியாக இவ்வுலகைவிட்டு நீங்க நேர்ந்தவர்கள்—நல்ல விழிப்பு நிலையில் இருப்பவர்களை ஒத்த உணர்ச்சியுடன் இருக்கும். அவர்கள் தாம் இறந்து போனார்கள் என்று உணர்வதில்லை. அவர்கள் சிறிது காலம் இப்பூமியில் தங்கி அங்கு நடப்பவைகளைப் பார்க்கவும் கேட்கவும் கூடும். அவர்கள் கவலையும் கலக்கமு முடையவர்களா யிருந்து தூக்க நிலையை அடைந்துவிடுவார்கள். மேல் நிலையிலுள்ள உயிர்கள் அதனைச் சூழ்ந்து நின்று அதன் நிலைமையை அதற்கு அறிவித்து ஆறுதலளிக்கும். அது தூக்க நிலையை அடையும் வரை இவை இவ்வாறு நிற்கின்றன. சடுதியாக இறந்து போகின்றவர்களுக்கு நல்லுயிர்கள் இவ்வாறு ஆறுதலளிக்கத் தவறுவதில்லை. கெட்டவரும் நல்லவருமாகிய எல்லோரும் கடவுளின் பிள்ளைகள் என்று அவர்கள் அறிவார்கள். மிகவும் உயிர் ஆற்றல்பெற்ற சிலர் மற்றவர்களுக்கு உதவி அளிக்கவும், அவர்களை ஆபத்தினின்று காக்கவும் தமது பூதஉடலைச் சிறிதுநேரம் விட்டுச் சூக்கும உடலிற் செல்வதும் உண்டு.

உயிர் தூக்க நிலைக்குச் செல்லும்போது அது இவ்வுலக வாழ்க்கையில் இருந்தபோது சிறு வயது

முதல் மரணகாலம் வரையில் நிகழ்ந்த எல்லா நிகழ்ச்சிகளும் அதற்கு ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்றுகின்றன. உயிரின் சூக்கும உணர்ச்சி அவைகளை எல்லாம் உள்ளே அடக்கி வைக்கின்றது அவ்வுணர்ச்சியே அச்செயல்களின் நன்மை தீமைகளை ஆராய்ந்து நீதிபதி ஒருவனைப்போலத் தீர்ப்புச் செய்ய வல்லது. இவ்வுலக வாழ்க்கையில் ஒருவர் செய்த நன்மை தீமைகள் இவ்வாறு உயிரிடத்தில் பதிந்துவிடுகின்றன. இவை அவ்வுயிருக்கு அடுத்த பிறப்பின் வினை விளைவுக்கு விதையாகும்.

இவ்வுலக வாழ்க்கைக் காலத்து உண்டான விருப்பு, வெறுப்பு, ஆசை போன்றவைகள் பதியப்பெற்ற உயிர் நித்திரைக்குச் செல்லுகின்றது. விதைகள் போன்ற இவ்வெண்ணங்கள் விரைவில் முளைத்துப் பூத்துப் பயனைக் கொடுக்கின்றன. இனி, இவ்வுலகில் வரக்கிடக்கும் பிறப்பில் அல்லாமல் மறுமை உலகிலும் அவை பயனைக் கொடுக்கின்றன. எல்லா எண்ணங்களின் பயன்களும் மறுபிறப்பில் விளையாதபடி சில எண்ணங்கள் மறு உலகத்திலேயே தோன்றி ஓய்ந்து போகின்றன. அவ்வாறு ஓய்ந்து போகாத உணர்ச்சிகள் அடுத்த பிறப்பில் தொடர்ந்து செல்கின்றன. இவ்வகையில் தூக்கநிலை உயிர்களுக்குப் பயனளிக்கின்றது தாயின் வயிற்றில் இருக்கும் கருப்பத்துக்குத் தூக்கநிலை எப்படி அவசியமோ அப்படியே உயிர்களுக்கும் தூக்கநிலை அவசியம்.

## உயிரின் விழிப்பு

உயிர்கள் தூக்கநிலையில் இருக்கும் காலம் வேறுபடும். யானை கருப்பத்தில் இருபது மாதமும், முயல் ஒரு மாதமும், கினியாப்பன்றி மூன்று வாரமும் இருக்கின்றன; மனிதன் ஒன்பது மாதம் இருக்கின்றான். ஒவ்வொரு உயிரும் விழித்தவுடன் அது அது வாழ்வதற்கு ஏற்ற உலகுக்குச் செல்கின்றது. இப்பொழுது மனிதவடிவிலுள்ள சூக்கும உடலையும் அது கழற்றிவிடுகின்றது. இப்பொழுது அதற்கு என்ன தோற்றம் இருக்கின்றதென்று சொல்லமுடியாது. மேலான ஆவி உலகில் வாழ்கின்றவர்களுக்குக் கை கால்கள் தேவையில்லை; அவை இவ்வுலக வாழ்க்கைக்கே தேவைப்படுவன. இவ்வாறு உயிர்களால் கழற்றி விடப்பட்ட உடல்கள் கீழ் உலகங்களுக்கு மிதந்து செல்கின்றன. கீழ் உலகங்களில் இவ்வாறு மிதந்து செல்லும் உயிரற்ற சூக்கும உடல்களை காணலாம். இவை பார்ப்பதற்கு விருப்பு அளிப்பனவல்ல. இவைகளை மேல் உலகத்தில் வாழும் உயிர்கள் காண்பதில்லை. உயிர் தூக்கத்தினின்றும் விழித்தவுடன் அது தான் முன் விட்டுச் சென்ற உடலுக்காக வருந்துவதில்லை. இது, ஒரு வண்ணத்திப் பூச்சி, தான் முந்தியிருந்த கூண்டுப் புழு நிலையைக் குறித்து வருந்தாதது போன்றதாகும்.

## ஆவி உலகில் அறிவு வளர்கின்றது

ஆவி உலகில் உயிர்களின் உள்ளறிவு கிளைவிட்டுச் செழித்து வளர்கின்றது. அவ்வறிவு

அவை மறுபடியும் இவ்வுலகில் பிறவி எடுக்கும் போது மலர்வதற்கு ஆயத்தமாயிருக்கின்றன. ஆவி உலக வாழ்க்கையில் மனம் ஒருவழிப்பட்ட நிலையில் இருக்கும்போது ஒவ்வொரு உயிரினதும் விவேகம் விரைவில் வளர்ச்சி அடைகின்றது. உயிர்கள் அதனை இனி மண்ணுலகில் பிறக்கும் போது வெளிப்படுத்துவதற்குத் தம்முள் அடக்கி வைத்திருக்கின்றன. இவ்வாறு அவைகளிடத்தில் அடங்கிக் கிடக்கும் விவேகம் அவை மண்ணுலகில் பிறக்கும்போது இயற்கை விவேகம்(intution) ஆக வெளிப்படுகின்றது. புதியவற்றைக் கண்டுபிடித்த அடிசன், பெரிய தத்துவசாத்திரிகளாகிய ஏகெல் (Hegel' ஹார்பேட் ஸ்பென்சர், பெரிய இயற்கை ஆராய்ச்சி வல்லுநர்களாகிய டார்வின், ஹக்ஸ்லி முதலியவர்களுடைய அறிவு இவ்வகையில் பெறப் பட்டவை. இவர்கள் தமது முன்பிறப்புகளில் தாம் விரும்பியவற்றை அறிய மிகமுயன்று வந்தமை யால் அவர்கள் அவைகளைப் பற்றிய அறிவை ஆவியுலகில் வளர்த்துக்கொண்டார்கள். இவர்கள் கண்டுபிடித்தவைகள் வானத்தினின்றும் வந்தவை போல இவர்களுக்குச் சடுதியில் தோற்றப்பட்டன.

## பிறப்பு

உயிர்கள் ஆவிஉலகில் ஓர்உலக வாழ்க்கையி லிருந்து வேறுஓர் உலகவாழ்க்கைக்குச் செல்லும் போதும் தூக்கநிலை உண்டாகின்றது. இவ்வாறு நல்லுலகங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் உயிர் களுக்குப் புதுவகையான அனுபவங்களைப் பெறும் விருப்பு உண்டாகின்றது. அப்பொழுது அவை

களுக்குப் பிறவி உண்டாகின்றது. அவைகள் தங்கள் விருப்பங்களை அடையக்கூடிய சூழலில் ஏற்ற தாய் தந்தையர் மூலம் பிறவி எடுக்கின்றன. பிறவி எடுக்கும்போது அவை மறுபடியும் தூக்க நிலையை அடைகின்றன. பிறவி எடுக்கும் நேரம் வந்ததும் அவை ஆவி உலகில் இறந்துபோகின்றன; இறந்தபின் இவ்வுலகில் வந்து பிறக்கின்றன. இவ்வுலகில் உயிர்கள் பிறந்த பின்பும் அவை ஒருவகை அரைத்தூக்க நிலையில் இருக்கின்றன. இப்பொழுது குழந்தையாகப் பிறந்துள்ள நிலையில் அவை உடனே முற்றாக விழிப்படைவதில்லை. அவை குழந்தைமுதல் வாலிபம் அடையும் வரையில் சிறிது சிறிதாகப் படிப்படியே விழிப்படைகின்றன. சில சமயங்களில் இயற்கைக்கு மாறாகச் சடுதியாக விழிப்பு உண்டாகிவிடுகின்றது. நாம் இவ்வாறு சில குழந்தைகளின் அளவுகடந்த விவேகத்தைப்பற்றிக் கேள்விப்படுகின்றோம். இவ்வகை நிகழ்ச்சிகள் நமக்கு வியப்பை உண்டாக்குகின்றன. சில சமயங்களில் உயிர்கள் மிகக் காலங்கடந்தே முழு விழிப்பு நிலை அடைகின்றன. சிலரிடத்தில் நடுத்தர வயதுக்கு முன் விவேகத்துக்குரிய குறிகள் காணப்படுவதில்லை. சிலர் நாற்பது ஆண்டுகளுக்குப் பின்பே விவேகமுள்ளவர்களாக மாறியுள்ளனர். இவர்களை முன்பு அறிந்தவர்கள் பின்பு இவர்களைக் குறித்து வியப்படைய வேண்டியவர்களாயினர்.

ஆவி உலகில் உயர் நிலை அடைந்த உயிர்களே மறுபடியும் இவ்வுலக மக்களின் நன்மையின்

பொருட்டுப் பெரிய மதபோதர்களாகவும், தலைவர்களாகவும் பிறவி எடுக்கின்றனர். அவர்கள் இவ்வுலகில் மக்கள் உடலில் உலாவினபோதும் மனிதரிலும் மேற்பட்டவர்களாகவே கருதப்படுகின்றார்கள்.

உயிர்கள் பக்குவம் அடையும் பொருட்டுப் பிறந்து வாழ்கின்ற எண்ணில்லாத உலகங்களில் பூமியும் ஒன்று. ஆவி உலகங்களில் இறுதி வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் பல உயிர்கள் உண்டு. இனிமேல் பூமிக்கு மறுபடி ஒருபோதும் வராத பல உயிர்கள் இவ் வுலகில் வாழ்கின்றன. ஒவ்வொரு உயிரும் மேல் நிலை அடையும் இலக்கோடு வாழ்ந்து வருகின்றன.

## மறுபிறப்பு நினைவு

இறந்துபோன சில உயிர்கள் இவ் வுலகத்திலுள்ள சிலர்மீது கொண்டுள்ள அளவிறந்த பற்றினால் விரைவில் மறுபடியும் பிறக்கின்றன. அவைகளுக்குப் பழம் பிறப்பைப்பற்றிய ஞாபகம் இருக்கின்றது. பழம்பிறப்பின் ஞாபகத்தைப் பற்றிய வரலாறுகள் பின்வருவன: "சமீப காலத்தில் சாந்ததேவி என்னும் சிறுமி தன் பழம்பிறப்பைப்பற்றிய நிகழ்ச்சிகள் சிலவற்றைத் தெளிவாகக் கூறினாள். இவள் கூறியவைகளைக் கேட்டு டெல்கியிலும், மத்தராவிலும், ஐக்கிய மாகாணத்திலும் பெரிய வியப்பு உண்டாயிற்று. சிறுமிகூறும் பழம்பிறப்பு நிகழ்ச்சி வரலாறுகளைக் கேட்பதற்குப்பெருந்திரளான மக்கள் கூடினார்கள். முற்பிறப்

பில் அவள் கணவனாயிருந்தவனையும் அவள் பிள்ளையையும் அவள் அடையாளங் கண்டுபிடித்தாள். பணம் எங்கே வைக்கப்பட்டுள்ள தென்பதையும் இப்பொழுது மூடப்பட்டுள்ள கிணற்றையும் அவள் காட்டினாள். நம்பிக்கையும் பொறுப்பும் வாய்ந்தவர்கள் அவள் கூறியவைகளைக் கேட்டுள்ளார்கள்.''

''கஸ்ரார் என்னும் போர் வீரன் 1889-ல் பிறந்தான். அவன் சிறுவனாயிருந்த காலம்முதல் நித்திரையில் பேசுவது வழக்கம். அவன் நித்திரையில் பேசியவை பர்மிய மொழிச் சொற்றொடர்கள். 1907-ல் அவன் பட்டாளத்தில் சேர்ந்தான். 1909-ல் அவன் பர்மாவுக்கு அனுப்பப்பட்டான். அவன் சென்ற இடம் அவனுக்கு முன் தெரிந்த இடம் போல் காணப்பட்டது. ஐராவதிக்கு அடுத்த கரையில் பெரிய கோயிலொன்று இருக்கின்றதென்றும், அதன் சுவரின் உயரத்தில் இருந்து கீழ்வரையும் ஒரு வெடிப்பு உள்ளதென்றும், அதற்குக் கிட்ட ஒரு மணி இருக்கின்றதென்றும் அவன் தனது 'கோப்போரலி'டம் கூறினான். அதை ஆராய்ந்து பார்த்தபோது அவன் கூறியது உண்மையாகக் காணப்பட்டது''

—இலண்டன் சண்டே எக்ஸ்பிரஸ்-1935

''பிசாப்பூரிலுள்ள ஒரு போஸ்டாபிஸ் கிளார்க்கின் மகனாகிய மூன்று வயதுடைய பையன் சடுதியாக நான் எனது வீட்டுக்குப் போக வேண்டுமென்று சத்தமிட்டான். அவன் தொடர்ந்து கூறியது பின் வருமாறு: 'நான் சிற்றூக்கொங்கிலுள்ள

வசிப்பூரில் வாழ்பவன். லக்சம் என்னும் புகை வண்டி நிலையத்திலிருந்து இக்கிராமத்துக்கு ஒரு வீதி செல்கின்றது. இது சர்வானந்தா என்பவர் அடங்கிய காளிகோயிலுக்குக் கிட்ட உள்ளது. அங்கு காளி விக்கிரகம் இல்லை. அங்கு பெரிய ஆலமரம் நிற்கிறது. அதன் அடியில் மக்கள் வணக்கம் செய்து வருகிருர்கள். அங்கு ஒரு பனை மரம் நிற்கிறது' பையனின் தந்தை சிற்ருக்கொங்குக்கோ லக்சம் புகைவண்டி நிலையத்துக்கோ ஒரு போதும் சென்றதில்லை.

—அட்வான்ஸ் (Advance 15-7-36)

கோன்பூரில் வசிக்கும் தேவி பிரசாத்தின் ஐந்து வயதுக் குழந்தை கூறுவது வருமாறு: எனது முற்பிறப்பில் எனது பெயர் சிவதையல் முக்தாஸ். நான் 1931-ல் நடந்த கோனபூர் கலகத்தில் கொல்லப்பட்டேன். இரண்டு முசிலிம் நண்பர்கள் என்னைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்கே அவர்கள் என்னைக் கொன்ருர்கள்.

அமிர்த பசார் - 1—5—36

"பிளாக்பூல் (Blackpool) என்னும் இடத்தில் ஐந்து வயதுக் குழந்தை ஒன்று தனது பாவையோடு விளையாடுவதிலும் பார்க்க நன்ருகத் தனது பியாஞே வாத்தியக் கருவியில் விளையாடுகிருள். அவள் யாரிடமும் பியாஞே வாசிக்கப் பழகவில்லை.

பீப்பிள் (People 20—6—37)

**[1] மரணத்தின் பின் நீ எப்படி வாழ்கின்றாய் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகள் கீழ்வருவன :—**

எங்கள் உடலோடு ஆவிமயமான இன்னொரு உடல் இருக்கின்றது. அது உடலைவிட்டு வெளியேறும்போது உடலின் தோற்றமுடைய ஆவி வடிவாகத் தெளிவுக் காட்சியாருக்குக் காணப்படுகின்றது. இது கெதியாக அசைந்துசெல்லக் கூடியது. இது மரணத்தின்பின் பாரமான உடலை இங்கு விட்டுவிட்டு மற்ற உலகுக்குச் செல்கின்றது. ஆவிமயமான உடலையும் பருஉடலையும் ஒரு கொடி பிணித்துக்கொண்டிருக்கிறது. இது பிள்ளையையும் தாயையும் இணைத்துப் பிடிக்கின்ற கொப்பூழ்க் கொடிபோன்றது. பிள்ளை பிறக்கின்றபோது கொப்பூழ்க்கொடி தாயின் உடலை விட்டுப் பிரிந்துபோவதுபோல மரணகாலத்தில் சூக்கும உடலையும் பரு உடலையும் பிணைத்திருக்கும் கயிறு அறுந்துபோகின்றது. இப் பிணிப்பு விடுபட்டதும் இறந்துபோனவர் தனது உடலைத் தானே பார்க்கிறார். இப்பொழுதுதான் இறந்து போனவர் தான் உடலல்லர் என்று முதன்முறையாக அறிந்துகொள்கிறார். இறந்துபோன உடல் கழற்றி எறிந்துவிடப்பட்ட ஒரு உடையைப் போன்றது.

இயற்கையான மரணம் நேர்ந்தபின் இறந்தவருக்குத் தனக்கு நிகழ்ந்திருப்பதைப்பற்றி நன்றாகத்தெரிகிறது. சடுதியாக இறந்துபோனவர்

---

1. How you live when you die—Shaw Desmond.

அதனை உணர்வதில்லை. மரணமென்பது உண்மையாக ஒரு பிறப்பேயாகும். மரணத்துக்கும் ஒரு பிள்ளை இவ்வுலகில் பிறப்பதற்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

* * *

இப் பூமியிலே ஒருவரை ஒருவர் கண்டு அன்பு கொள்ளுகின்றவர்கள் ஆவி உலகத்தில் நண்பர்களாயிருந்தவர்களாவர்.

* * *

தாயின் கருப்பத்திலுள்ள உடல் சிறிது வளர்ந்தபின்னரே ஆவி உடலிலுள்ள உயிர் அதனுள் உறையும்படி செலுத்தப்படுகின்றது.

* * *

இறந்தபின் உயிர் தூக்கநிலையை அடைகின்றது. அது விழிக்கும்போது ஆவி உலகுக்குச் சென்றுள்ள அதன் தாய், தந்தை, பிள்ளை மனைவி, கணவன் அல்லது நண்பர் அதற்கு, முன் தோன்றுவார்கள்.

போரிலே ஈட்டியினால் குத்தப்பட்டு இறக்கின்றவனுக்கு அவனுக்கு நேர்ந்தது என்ன என்று தெரியாது. அவன் இன்னும் உலக வாழ்க்கையில் இருப்பதாக நினைத்துச் சண்டை செய்கிறான். அப்பொழுது இரக்கமுள்ள ஆவிகள் அவனுக்கு நிகழ்ந்திருப்பதை அறிவிக்கின்றன. அவன் அவை சொன்னவைகளை நம்பமாட்டான்; அவனைப்போலக் கலக்கமடைந்த பல ஆவிகளைக் காண்கிறான்.

* * *

ஆவி உலகில் குழந்தைகள் வளருகின்றன. முதியவர் இளமையடைகின்றனர்; அவர்கள் முப்பது வயது உடையவர்கள்போற் காணப்படுகின்றனர். அவர்கள் இவ்வுலகத்தில் ஆவியோடு பேசும் இடங்களில் (Seance) தோற்றும்போது இவ்வுலகத்தில் அவர்கள் வாழ்ந்த காலத்திய தோற்றம் அளிக்கின்றனர்; அவர் பேசும் குரலும் அவர்கள் முன்பேசிய குரல்போன்றது.

*　　　　*　　　　*

ஆவிஉலகில் கீழ் உலகங்களிலிருப்பவர்கள் மேல் உலகங்களுக்குச் செல்லவிடப்பட மாட்டார்கள்.

3763.

*　　　　*　　　　*

நாம் இவ் வுலகில் பிறப்பது நித்திரையும் மறதியும் போன்றது. நாம் இறப்பது நித்திரையும் நினைவும்போன்றது.

*　　　　*　　　　*

மரணம் எங்களை ஊன் சுமையினின்றும் விடுதலைசெய்து எங்களுக்குமுன் சென்றுள்ளவர்களை அடையும்படிவிடுகின்றது.

*　　　　*　　　　*

ஆவி உலக வாழ்க்கையில் நாம் எமது முன் பிறவிகளைப்பற்றி அறியக்கூடிய உயர்ந்த ஆற்றலைப் பெறுகின்றோம்.

*　　　　*　　　　*

மண்ணுலகில் வாழ்ந்துகொண் டிருக்கின்றவர்களாகிய தம்மால் மிகவும் அன்பு பாராட்டப்படுகின்றவர்கள் வரும்வரையில் சில ஆவிகள்

பிறவி எடாமல் தாமதித்து இருக்கின்றன. தமது அன்புக்குரியவர்கள் வந்ததும் தாம் மண்ணுலகில் பிறந்து ஒருமித்து ஒருவர்மீது ஒருவர் அன்புடையவர்களாக வாழும்படி ஒரே காலத்தில் பிறவி எடுக்கின்றன.

* * *

மண்ணுலகில் இறக்கும்போது நமது ஆவி உடல் விடுதலை அடைகின்றது; நாம் கழிந்தவற்றை ஞாபகத்தில் வைத்திருக்கிறோம்; இனி நிகழவிருக்கும் செயல்களை நம்மால் அறிய முடியாது.

* * *

ஆவி உலகிலிருந்து உயிர் பூமியிலே பிறவி எடுக்கச் செல்லும் நாளில் அதன் நண்பர்கள் கூடி அதற்குப் பிரியாவிடை அளிக்கிறார்கள்.

## மறு உலக வாழ்க்கை

***ரேய்மோன்ட்** என்னும் இளைஞன் போர் முனையில் இறந்தபோது அவன் ஆவி உலகைப்பற்றிய செய்திகளை ஒருவர்மீது ஆவேசித்து நின்று கூறிய செய்தி பின்வருவது:

இவ்வுலகில் இரவுக்குப்பின் பகல் வருவதில்லை. நாம் இருட்டாக இருக்கவேண்டும் என்று விரும்பும்போது இருள் உண்டாகின்றது.

இங்கு உள்ளவர்களுக்கு கண்கள் கண் இமைகள் கண் புருவங்கள் பற்கள், நாக்கு உண்டு. மண்

---

*Raymond—Sir Oliver Lodge

ணுலக வாழ்க்கையில் ஒரு பல்லில்லாத ஒருவனுக்கு இப்பொழுது அழகிய பல் இருக்கிறது. ஒரு கையில்லாதிருந்த ஒருவனுக்கு இப்பொழுது கை வளர்ந்திருக்கிறது. ஆவி உலகத்துக்கு வந்தபோது அவன் கையில்லாதவன் போலக் காணப்பட்டான்; பின் கை வளர்ந்துவிட்டது. போரில் உறுப்புகளை இழந்து இறந்துபோனவர்கள் இவ்வுலகுக்கு வரும் போது அவர்களின் உறுப்புகள் நிறைவாக இருக் கின்றன. ஒருவனுடைய உடல் துண்டு துண்டா கச் சிதறிப்போக நேர்ந்ததால் ஆவி உடல் ஒன்று சேருவதற்குச் சிறிது நேரமாகின்றது.

இங்கு பெண்களும் ஆண்களும் வாழ்கிறார்கள். மண்ணுலகில் வாழும்பொழுது எவ்வகைச் சம்பந்த மிருந்ததோ அவ்வகை சம்பந்தம் அவர்களுக்கு இங்கு இருப்பதாகத் தெரியவில்லை. இங்கு குழந்தைகள் பிறப்பதில்லை. மண்ணுலகில் பிள்ளை களைப் பெறும் பொருட்டு ஆவி உலகிலுள்ளவர் கள் பருஉடலை எடுத்துப் பிறக்கிறார்கள். உனது உடல் கிடக்கின்ற இடத்தைப் பார்த்து நீ மகிழ்கின் றாயோ என்று சிலர் என்னைக் கேட்கிறார்கள். நான் அதைப்பற்றிச் சிறிதும் கவனம் எடுக்கவில்லை. அது நான் கழற்றி எறிந்துவிட்ட பழைய சட்டை யைப் போன்றது; என்னுடைய உடல்மீது பூக்க ளைப் போடுவதைப்பற்றி நான் விரும்பவில்லை.

போரில் இறந்து போனவர்கள் தாம் இறந்து போனதை உணர்வதில்லை. வேறு ஆவிகள் அவர் கள் இறந்து போயிருப்பதைப்பற்றி அவர்களுக்கு அறிவிக்கின்றன.

***யோஹனிஸ் என்னும் ஒருவரின் ஆவி கூறியுள்ள மறு உலகத்தைப்பற்றிய செய்திகள் பின்வருவன:**

புலி பாம்புகள் போன்ற உயிர்கள் நாம் வாழும் ஆவி உலகின் பகுதியில் இல்லை. அவை விலங்குகள் வாழ்கின்ற உலகுக்குச் செல்கின்றன; பின்பு அவை பருஉடலை எடுத்து நிலவுலகிற் பிறக்கின்றன. அன்பும் கீழ்ப்படிவுமுள்ள உயிர்கள் எங்களோடு வாழ்கின்றன. இங்கு நாய்கள் வாழ்வதைக் கண்டு நான் மகிழ்கின்றேன். என்னிடம் இரண்டு பூனைகள் இருக்கின்றன. நான் பூமியில் வாழ்ந்த காலத்தில் அவைக்கும் எனக்கும் சில தொடர்பு இருந்திருக்கலாம். இங்கு சிறுவர் வாலிபராக வளர்கின்றனர், முதியவர் இளமை அடைகின்றனர். இங்கு உடற்குறை என்பது இல்லை. நாம் ஒருவகையான நிறைவை மேலும் மேலும் அடைகின்றோம். இங்கு எப்பொழுதும் வெளிச்சமிருக்கிறது; ஆனால் நாம் வட்டமான சூரியனைக் காண்பதில்லை.

மரணம் என ஒன்று இல்லை. அது இப்பூமியில் நிழல்போன்றது. நாம் ஒரு உலகிலிருந்து இன்னொரு உலகுக்குச் சென்று முடிவில்லாமல் வாழ்கின்றோம்.

நரகம் என ஒன்று இல்லை. நரகத்தை நாம் பூமியிலேயே உண்டாக்கி அங்கு நரகத்தில் வாழ்கின்றோம். நரகம் என்பது மனத்தின் நிலை.

நீ பிறக்கும்போது உன்னிடம் மூன்று பகுதிகள் அடங்கியிருக்கின்றன. ஒன்று உனது உடல்.

---

*F. N. Towards the stars—H Dannis Bradley

இது உனது போர்வையைப் போன்றது. இதை விட ஆவிமயமான இன்னொரு உடல் உண்டு. சட்டையைப் போன்ற பருஉடலை நீ விடும்போது உயிர் ஆவி உடலில் புகுந்து கொள்கின்றது ஆவி மயமான உடல் இம்மண்ணுலக வாழ்க்கையிலுள்ள உடலிலும் பார்க்க நீண்ட நாள் நிலைக்கும். இவ்வுடல் இருக்கின்ற காலத்தில் நீ ஒரு உலகிலிருந்து ஒரு உலகுக்குச் சென்று பல அனுபவங்களை அடைகிறாய்.உலகங்கள் என்பன இடங்கள். அங்கு உயிர்கள் தாம் அறியவேண்டியவைகளை அறியப் பழகுகின்றன. நீ ஒரு நிலையை அடைந்தவுடன் உனக்கு இன்னொரு மரணம் உண்டாகின்றது, அப்பொழுது உயிரும் மனமும் மாத்திரம் உள்ளன. அப்பொழுது உயிர் அமைதியானதும் உவமிக்க முடியாததுமான நிலையை அடைகின்றது ; அதனை நாம் நினைத்து அறிந்து கொள்ளமுடியாது.

சிலர் தமக்கு மரணம் நேரவேண்டிய காலம் வருவதன் முன் தற்கொலை புரிந்து கொள்கிறார்கள் இது மிகவும் கடுமையான தண்டனைக்குரிய செயலாகும். இது ஒருவன் தன் உடலைத் தானே உண்பதுபோன்றது. இச்செயல் உடம்பு சம்பந்தத்தினால் செய்யப்படுகின்றது. இது உடல் உயிரைப் பழிவாங்குவது போன்றது. தற்கொலை புரிந்து கொண்டவர்களின் உயிர் நீண்ட காலம் இருளில் இருக்கின்றது. கொலை தற்கொலையிலும் பார்க்க மேலான பாவம்.

உடல் பிரிகின்றபோது உயிரும் மனமும் நிலை பெறுகின்றன. மரணமென்று உண்மையில் ஒரு

வகைப் பிறப்பாகும். அப்பொழுது இறந்த உயிர்களை இருட்டானவும் வெப்பமானவும் இடத்துக்குக் கொண்டுபோய்விடுகிறோம். இப்புதிய உலகில் வாழத் தகுந்த நிலை அடையும் வரையும் அவை அங்கு இருக்கின்றன. பின்பு அவ்வுயிர்கள் சில காலம் கீழ் உலகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கு உடலில்லாத புதிய நிலைமையில் வாழ அவை பழக்கமடைகின்றன. இப்பொழுது உடம்பு வளர்ச்சிக்கு வேண்டிய உணவு தேவையில்லை; ஆனால் பாதுகாப்பும், ஒதுக்கிடமும் வேண்டும்; அவை அளிக்கப்படுகின்றன. இதைப்பற்றி நான் விரித்துக் கூறவேண்டுமென்று நீ விரும்பலாம். எங்கள் உலகத்தில் பட்டினங்கள் உண்டோ என்று நீ கேட்கலாம். பட்டினங்கள் இருக்கின்றன என்று சொல்லமுடியாது. பூமியில் காணப்படுவது போன்று மக்களின் நெருக்கம் இங்கு இல்லை. நாங்கள் இங்கு கூட்டங்களாக வாழ்கின்றோம் நாம் ஒவ்வொருவரும் மற்றவர் உணர்வதை அறிகின்றோம். வாழ்க்கையின் கடைசி இலக்கு ஒவ்வொருவரும் தம்மைப்பற்றி அறிந்துகொள்வது.

போர் கொலையைப்போலப் பாவமுடையது. ஒரு மனிதனுக்குச் சட்டப்படி கொலைத்தண்டனை விதிப்பதும் பாவமானது. மனிதனெவனுக்காவது இன்னொரு மனிதனின் வாழ்நாளை வெட்டிவிட அதிகாரமில்லை. மரணதண்டனை விதிக்கும்முறை ஒழிக்கப்படவேண்டும். கொலை செய்தவனுக்கு அவன் செய்தவற்றை உணரும்படியான வாய்ப்பு அளிக்கவேண்டும்,

உடலைவிட்டு உயிர் வெளியேறினதும் உயிர் மனத்தினால் விரிவடைகின்றது. விருப்பங்கள் ஓரளவில் மறைந்துபோகின்றன. அவை அவ்விருப்பங்களைத்தாம் ஆறியிருக்கும் இடத்துக்குக்கொண்டு செல்கின்றன. விருப்பங்கள் அவைகளோடு சிறிதுகாலம் நின்று பின் படிப்படியாக மறைந்து போகின்றன. இங்கு ஆண்களும் பெண்களுமிருக்கிறார்கள். இங்கு அவர்களுக்கிடையில் உடல்சம்பந்தமான விருப்பு இல்லை. இங்குள்ள விருப்பு ஒரு மனம் மற்றவர் மனத்தோடு கலந்து நிறைவு அடையும் பொருட்டாகும். மரணமடைந்தபின் உயிர் ஓய்ந்து ஆறியிருக்கும் இடத்துக்குச்செல்கின்றது. அதற்கு உடலில்லாதிருக்கின்ற பயத்தைவிட வேறுபயம் உண்டாவதில்லை. இது குழந்தையின் பயத்தைப்போன்றது; இது உண்மையில் இரண்டாவது பிறப்பாகும்.

ஒவ்வொரு உலகிலும் பல மண்டலங்கள் உண்டு. பூமியில் வாழ்வது போலவே நீ இங்கு வாழ்கின்றாய். பூமியிலும் நீ பலமண்டலங்களில் வாழ்கிறாய். குடிகாரனும் ஊணனும், ஞானியும் கலைஞனும் வாழும் மண்டலத்தில் வாழவில்லை. இம்மண்டலங்கள் வளர்ச்சிப்படிகள். நீ மேலுக்கு மேலுக்குச்செல்ல அங்குவாழ்தற்கேற்றதகுதியான மனநிலையை அடைகின்றாய். ஆவிஉலகம் ஒன்றிலிருந்து உன்னை ஒருவர் பூமிக்குச் சடுதியாகத் தள்ளிவிட்டால் உனக்குப் பெரிய தாக்குதல் உண்டாகும். உனது உணர்ச்சியின்கடுமையை உன்னால் தாங்கமுடியாது. ஆகவே உனது மனவளர்ச்சிக்கு

ஏற்ற ஒரு மண்டலத்தில் நீ வாழ்கின்றாய். நீ மரணமானவுடன் உனது உணர்ச்சிகள் மிகக் கூர்மை அடைகின்றன. புதிய நிலைமைக்கேற்ப நீ பழகவேண்டும். இதுவே நீ முதலில் பழகிக் கொள்ளவேண்டியது........இங்கு ஒரு மொழிதான் உண்டு. எங்களுடைய எண்ணங்களே எங்களது மொழி. ஒவ்வொரு உயிருக்கும் அதற்குரிய வடிவம் உண்டு. அவ்வடிவம் மண்ணுலக வாழ்க்கைக் காலத்தில் உண்டானது. அங்கிருந்த வடிவுட னேயே அது இங்கு வருகின்றது; மண்ணுலகில் காணப்படுவதுபோலவே இங்கு ஆண்களும் பெண் களும் இருக்கின்றனர். நாங்கள் உடை அணிகின் றோம். உங்களுக்கு உடை என்ன பயனைக் குறிக் கின்றதோ அதே பயனே எங்களுக்குமுண்டு. அவை நினைவளவில் மறைப்பாகவிருக்கின்றன; ஆனால் உண்மையான உடைகளல்ல. இறந்தபின் நீங்கள் வேறுவகையாக வாழ்கிறீர்கள் என்று நினைக்கவேண்டாம்; உங்களுடைய உடைகளைப் போல எங்கள் உடைகள் கடைகளில் செய்து விற் கப்படுவனவல்ல. ஒவ்வொரு உயிரினுடைய நினை வுமே ஆடையாகத் தோற்றமளிக்கின்றது. நாங் கள் வாழும் வீடுகளைப்பற்றி நீ கேட்டறிய விரும்ப லாம் அதைப்பற்றி விளங்கவைப்பது மிகக்கடினம் நாங்கள் சமூகமாக வாழ்கின்றோம்; எங்கள் வீடு கள் பல பெரிய இடங்கள்; அங்கு ஒரே கருத்து உடையவர்கள் ஒன்று சேர்ந்து வாழ்கிறார்கள்.

ஓர் உயிர் இங்குவரும்போது அதற்குப் பூமி யில் வாழும்போது உண்டாயிருந்த ஞாபகங்கள்

இருக்கின்றன. அது உடலினின்றும் பிரிக்கப் பட்ட தாக்குதலினால் முதலில் ஒருவகை மயக்கம் அடைகின்றது. மயக்கம் தெளிந்ததும் அது தனிமையால் வருந்துகின்றது. இங்கு புதிதாக வந்த உயிர், ஒரு குழந்தை பிறந்து படிப்படியாக வளர்ந்து நடக்கப்பழகுவது போன்ற நிலைமையி லிருக்கின்றது. அதன் ஆற்றல் பெருகுவதால் அது வருத்தமடைகின்றது; பூமியில் அதற்கு அருமை பெருமையுடையவர்களா யிருந்தவர் களை நினைத்து அவர்களைக்காண அது விரும்பு கிறது.

எல்லாவற்றுக்கும் காரணமாயுள்ள கடவுள் இன்னும் எனக்கு மறைவாகவே இருக்கிறார். இன்னும் பலகாலத்திற்குப் பின்தான் நான் அவ ரைப்பற்றி அறிவேன் என்று நம்பியிருக்கிறேன். இருக்கும் உலகில் ஆள்வோரும் அதிகாரி களும் இருக்கிறார்கள். உனது உலகத்திலுள்ளவர் களிலும் பார்க்க இவர்கள் ஆளத்தகுதியுடைய வர்கள்.

இவ்வாறு மேல்நிலை அடைந்து கொண்டு சென்றால் இறுதியில் என்னமுடிவு என்பதைப் பற்றி நீ அறியவிரும்பலாம். உயிருக்கு இரண்டா வது மரணம் உண்டாகின்றது. பின்பு உயிர்மாத் திரம் தனியே நிலைபெறுகின்றது. பின்பு உயிர் இயற்கையாக அறியும் அறிவுமயமாக மாறிவிடு கின்றது.

### பேய்கள்

மரணத்துக்குப் பின் உயிர் நுண்ணிய உடலோடு மறு உலகுக்குப் பயணப்படுகின்றதென்றும் சில காலத்தின்பின் அது மறுபடியும் இறந்து நுண்ணுடலையும் கழற்றிவிடுகின்றதென்றும் முன் ஓரிடத்திற் கூறியுள்ளோம். இவ்வாறு கழற்றி விடப்பட்ட நுண் உடல்கள் கீழ் உலகங்களுக்கு மிதந்து சென்று பழைய பூதியங்களாக மாறிவிடுகின்றன: இவ்வுடலுக்கும் முன்னைய பருஉடலுக்கும் ஒருவகைக் கவர்ச்சி இருப்பது போலத் தெரிகிறது. இவ்வுடல்கள் முன்னைய உடல் புதைக்கப்பட்ட இடத்துக்குக் கிட்டப் பெரும்பாலும் காணப்படுகின்றன. இடுகாட்டிலும் வயல்களிலும் இவ்வகையான உடல்கள் மிதந்துகொண்டிருப்பதைப் பலர் பார்த்திருக்கிறார்கள். இவைகள் இறந்தவரின் உயிர்கள் எனத் தவறாகக் கருதப்படுகின்றன. இவை உடலைவிட்டுப் பிரிந்துபோன உயிர்களல்ல.

## *யோன் பிளேக்கின் மரணகால நிகழ்ச்சி

யோன் பிளேக் மரணமடைந்த அறையில் தனது உடலைப் பார்த்தான். இது பொய்த் தோற்றமோ என்று அவன் நினைத்தான். பக்கத்தே அவனுடைய அழகிய மனைவி நின்றாள். பக்கத்தே அவன் பயன்படுத்திய பொருள்களு

* John Blake என்பவன் இறந்தபின் அவனுடைய ஆவி மரணகாலத்தில் நிகழ்ந்தவைகளை ஆவியோடு பேசுமிடத்தில் தோன்றிக் கூறிய விபரம்—How you live when you die pp 25, 26.

மிருந்தன. அவன் தனது மனைவியைப் பெயர் சொல்லி அழைத்தான். அவள் மறுமொழி சொல்லவில்லை. அவள் படுக்கையில் கிடக்கும் உடலைப் பார்த்துக்கொண்டு நின்றாள். இப்பொழுது அவன் குரலை உயர்த்திக் கூப்பிட்டான். அவள் கவனிக்கவில்லை. அவளுக்கு அது கேட்கவில்லை. அவனுக்குத் தனது குரல் கேட்கிறது. அவன் அறையைச்சுற்றி நடக்கிறான்; தனது மனைவியைத் தொடும்பொருட்டுக் கையை வைக்கிறான். அவனுடைய கை அவளுக்கு ஊடாகச் செல்கிறது. அவள் அவன் தொடுவதை உணரவில்லை, அவள் அவனைக் காணவும் முடியவில்லை; அவன் சொல்வதைக் கேட்கவும் முடியவில்லை. இப்பொழுதும் தனக்கு என்ன நடந்ததென்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் நடக்கும் போது அவனுடைய உடல் கிடக்கின்ற படுக்கையின் மூலையில் அவனுடைய முழங்கால் அடித்தது. அவனுடைய காலில் காயம் படுவதற்குப் பதில் அது படுக்கைக்கு ஊடாகச் செல்கின்றது. அவனுக்கு நோ உண்டாகவில்லை. அவன் தனது உடலைச் சுற்றி நின்று பலர் அழுவதைப் பார்க்கிறான். அவன் அவர்களுக்கு உயிரற்ற பொருள் ஒன்றைப் பார்த்து அழுவதன் மடமையைச் சொல்ல விரும்புகின்றான். ஆனால் அவர்கள் அவன் சொல்வதைக் கேட்கவும் அவனைப் பார்க்கவும் முடியாதவர்களா யிருக்கின்றனர். அவன் அவர்களுக்கூடாக நடந்து செல்கின்றான். அவன் அறையின் சுவரைத் தடவிப் பார்க்கிறான். அவன் மூடியிருக்கும் கதவைத் தள்ளுகிறான்.

உடனே அவன் மறுபக்கத்தில் நிற்கிறான். வழக்கம்போல் தான் நடப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. அவன் நினைத்தபடி மிதந்து சென்றான். அவனுக்குத் தூக்கம் வருகிறது. அவன் தனது படுக்கை அறைக்குள் மிதந்து செல்லுகிறான். பின்பு அவன் படிக்கும் அறையில் தான் நிற்பதை அறிந்தான். அப்பொழுது நிழல்போன்ற ஒரு பெண் உருவம் அவன் பக்கத்தே வந்தது. அவள் பேசுவது தூரத்தில் நின்று வரும் ஓசைபோல் கேட்டது. நீ வீட்டுக்கு மறுபடியும் வந்தது மகிழ்ச்சிக்குரியது. நீ ஆறுதலாக நித்திரைகொள் என்று அவள் சொன்னாள். நித்திரையாகும் போது தாயின் கை அவன்மீ திருப்பதாக அவன் உணர்ந்தான்.*

* * *

மரணமென்பது உயிர்கள் தாம் வாழும் உடலைத் தொழிற்படுத்தும் ஆற்றல் இழந்து வெளியேறுதலாகும். நாங்கள் எங்கள் நிலைமையை மாற்றிக்கொள்ள ஆவியுலகத்திநின்றும் வந்து காற்றுள்ள இவ்வுலகில் வாழ்கின்றோம். மரணத்திலும் நாம் நமது நிலைமையை மாற்றி இன்னொரு பிறப்பை அடைகின்றோம். ஆகவே மரணமென்பது இன்னொரு பிறப்பாகும்—**ரேமொன்ட்.**

---

* The case of John Blake is one taken out of my own 'case book'. It is not imagined but real. I knew this man in life—and strangely enough, know him in death. For he has returned to speak to me, not through the voice of medium, but in his own—and I have contracted him more than once. —**ibid**

## இறந்தபின் உயிர்களைப்பற்றிப் பழந்தமிழர் கொண்டுள்ள கருத்து

இன்று "சைவ சித்தாந்தக் கொள்கைகள்" என வழங்குவனவே பழந்தமிழரின் சமயக் கொள்கையெனவும் அக்கொள்கைகள் மக்கள் எல்லோருக்கும் பொதுவானவையெனவும் ஓரிடத்திற் கூறினோம். சிவஞானசித்தி என்னும் நூல் கூறுவது வருமாறு:

"பூதனாசரீரம் போனாற் புரியட்ட ரூபந்தானே
யாதனாசரீர மாகியின்பத் துன்பங்க ளெல்லா
நாதனாராணை யுய்க்க நரகொடுசுவர்க்கந் துய்த்துத்
தீதிலாவணுவா யோனிசேர்ந் திடுஞ்சீவ னெல்லாம்"

**இதன் பொருள்:** இந்தப் பருஉடல் கழியும்போது தானும் உடன் கழிந்து போகாமல் சூக்கும உடம்பு நிலைபெற்றிருக்கும்.......உயிர்கள் அவ்வுடம்போடு கடவுள் ஆணை செலுத்தச் சென்று சுவர்க்க நரகத்து இன்ப துன்பங்களை நுகர்ந்து பின்பு அவ்வினைச் சேடம் அனுபவித்தற் பொருட்டுச் சூக்கும உடம்போடு நிலத்திற் சென்று கருப்பாசயத்தை அடையும்.

"மருவுமுரு நிலையழிய வரும்பொழுது வரியார்
பன்னகமண் டசங்கனவு படர் வகையே முன்னம்
பகரவருங் கலாதிநிலை பரவியசூக் குமமாந்
தன்னுருவி னணைந்துபய னருந்தியர னருளாற்
றரையினிடை வருமென்று சாற்று நூலே"

(சிவப்பிரகாசம்)

**இதன் பொருள்:** உடல் நிலைகுலைய வரும் காலம் பாம்பு தனது சட்டையைக் கழற்றிவிட்டுப் போதல்போலவும், முட்டையிற் பிறந்தவை அதனை விட்டுப்போதல் போலவும் நனவிற் கண்டவற்றைக்

3763

கனுக் காணுங்காலத்து மறந்து அறிவுபட்டாற் போலவும்.......தனது சூக்கும உடலோடு சுவர்க்க நரகங்களை அடைந்து இன்பதுன்பங்களை நுகர்ந்து கடவுளருளால் மறுபடியும் பூமியில் வந்து பிறக்கு மென்று நூல்கள் கூறும்.

திருவள்ளுவர் மரணத்தை உறக்கத்துக்கும் பிறப்பை உறங்கிவிழிப்பதற்கும் உவமித்துள்ளார்.

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

ooooo

## 6000 ஆண்டுகளின்முன் எகிப்தியர் மரணத்தைப்பற்றிக் கொண்டிருந்த கருத்து

மனிதனுக்கு இரண்டு வகை உடல்கள் உண்டு. கண்ணுக்குப் புலப்படும் உடல் **கா(ற்)** எனப்பட்டது. பிறக்கும்பொழுது அவனுக்கு நுண்ணிய உடலும் ஒன்று உளது. மரணத்தின்போது அது உடலை விட்டுப் பிரிந்து போகின்றது. அது கா எனப் படும். பிரிந்துபோன கா தங்குவதற்கு இடம்வேண் டும்; உணவும் நீரும் வேண்டும். ஆகவே இறந்த வரைப் போன்ற உருவம் ஒன்று செய்து அதற் குப் பல கிரியைகள் செய்யப்பட்டன. அப்பொழுது அது நடத்தல் நினைத்தல் பேசுதல்போன்ற ஆற் றல்களைப் பெற்றுள்ளதென்று கருதப்பட்டது.

இவ்வுலக மக்கள் எல்லோரிடையும் இறந்த பின் உயிர்கள் அழிந்துவிடாது நிலைபெறுகின்றன என்னும் கொள்கை மிக மிகப் பழங் காலம்முதல் இருந்து வருகின்றது.

---